வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஓ.மு.எண். 4206 /ஆ4/2024 நாள்: 21.10.2024

பொருள் : தேர்வுகள் –மார்ச்/ஏப்ரல் 2024 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பள்ளி மாணவர்கள் மதிப்பெண் சான்றிதழ்கள் திருத்தங்கள் உள்ள பள்ளிகள் உடன்–23.10.2024க்குள் சமர்பிக்க தெரிவித்தல் –சார்பு

பார்வை : சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.020279/பி4/ 2024 நாள் 17.10.2024

===============

நடைபெற்று முடிந்த மார்ச்/ஏப்ரல் 2024. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை எழுதிய பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்), தலைப்பெழுத்து. தாய் மற்றும் தந்தை பெயர் (தமிழ்/ஆங்கிலம்), பிறந்த தேதி, புகைப்படம், பள்ளியின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) ஆகியவற்றில் திருத்தங்கள் கோரி ஒரு சில பள்ளிகள் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் அசல் மதிப்பெண் சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளனர்.

எனவே மார்ச்/ஏப்ரல் 2024. பத்தாம் வகுப்பு பள்ளி மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்), தலைப்பெழுத்து. தாய் மற்றும் தந்தை பெயர் (தமிழ்/ஆங்கிலம்), பிறந்த தேதி, புகைப்படம், பள்ளியின் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) ஆகியவற்றில் திருத்தங்கள் இருந்தும் விண்ணபிக்காத பள்ளிகள் உடன் திருத்தங்கள் மேற்கொண்டு 23.10.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்குள் ,வேலூர் அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்//
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்.

பெறுநர்:
அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலை/நிதியுதவிப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. வேலூர், அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.